# வானவில்

VAANAVIL
ISSUE – 60 DECEMBER 2015

இதழ் - 60 மார்கழி 2015


# புதிய அரசியல் அமைப்பில் 2000ஆம் ஆண்டுத் தீர்வுத் திட்டம் உள்ளடக்கப்பட வேண்டும்!




2015 ஜனவரி 08இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பின்னரும், ஓகஸ்ட் 17இல் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னரும், அரச தரப்பால் – குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியால் புதிய அரசியல் யாப்பு ஒன்றை அறிமுகம் செய்வது குறித்து அடிக்கடி பேசப்பட்டு வருகின்றது.

இதில் ஒரு வேடிக்கையான விடயம் என்னவெனில், ஐ.தே.க. தலைமை என்னவிதமான அரசியல் யாப்பை மனதில் கொண்டு பேசுகின்றது என்பதுதான். ஏனெனில், ஐ.தே.கவின் மிகவும் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல ஒருமுறை பேசும்போது, டொனமூர் பாணியிலான அரசியல் அமைப்பைத் தமது அரசாங்கம் அறிமுகம் செய்யப் போவதாகக் கூறினார்.

அவருடைய இந்தக் கூற்றை அவதானிப்பவர் எவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைவர். ஏனெனில், டொனமூர் அரசியல் அமைப்பு என்பது, 1948இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்பு அவர்களால் கொண்டு வரப்பட்ட ஒரு இடைக்கால அரசியல் அமைப்பாகும். சுதந்திர இலங்கைக்கு அது பொருந்தாது என்பதால்தான், சுதந்திர இலங்கைக்கு என பின்னர் அவர்களாலேயே சோல்பரி அரசியல் அமைப்பு கொண்டு வரப்பட்டது.

பின்னர் பிரித்தானியரால் வரையப்பட்ட அந்த அரசியல் அமைப்பும் சுதந்திர இலங்கைக்கு ஏற்புடையதல்ல என்பதால்தான், 1972இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'மக்கள் முன்னணி' அரசாங்கம் குடியரசு அரசியல் சாசனத்தை அறிமுகம் செய்தது. பின்னர் 1977இல் ஆட்சிக்கு வந்த இன்றைய பிரதமர் ரணில் சிங்கவின் மாமனார் ஜே.ஆர்.ஜெவர்த்தன (ரணிலும் அவரது அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருந்தார்), 1978இல் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்ட அரசியல் அமைப்பை அறிமுகம் செய்தார்.

'வினை விதைப்பவன் வினை அறுப்பான்' என்ற முதுமொழிக்கு

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# 5 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் 'வானவில்'

'**வானவில்**' பத்திரிகையை ஆரம்பித்து 60 மாதங்கள் உருண்டோடிவிட்டன. மொத்தமாக 58 இதழ்கள் வெளிவந்துள்ளன. சந்தேகமேயில்லை, உண்மையில் மெச்சக்கத்தக்க காரியத்தை சாதித்திருக்கிறோம் என்றே நாங்கள் திடமாக நம்புகின்றோம். எவ்வளவு காலத்திற்கு வெளிவரப் போகின்றது, இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளில் தோன்றி மறைந்த பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்று 'வானவில்'லும் இடையில் நின்றுவிடும் என்று நினைத்தவர்கள் பலர். இவர்கள் இப்போது மூக்கில் விரலை வைப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. மேலும் நாங்கள் 'வானவில்' பத்திரிகையை வெளியிட ஆரம்பிக்கும் போது இடையில் நின்று விடுமோ என்ற தயக்கத்தோடு ஆரம்பிக்கவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். அப்போது எப்படி உறுதியாக இருந்தோமோ, அதே உறுதியுடனே இப்போதும் செயற்பட்டு வருகின்றோம். அதனால்தான் 'வானவில்' தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. சிறு நெருப்பு பெருந்தீயை மூட்டும் என்று நாங்கள் என்றென்றைக்கும் நம்புகின்றோம்.

2014 இல் தடங்கல்கள் காரணமாக சிலகாலம் இதழ்கள் தாமதமாக வந்தன. பின்னர் 2014 மார்கழி மாதத்து இதழ் முற்றாக வெளியாவில்லை. பலர் விசனித்தார்கள். 'வானவில்' ஏன் இன்னமும் வெளிவரவில்லையென பலர் அங்கலாய்க்கும் போதுதான் எங்களது பொறுப்புணர்வு இன்னமும் அதிகரித்திருப்பதாக நாங்கள் உணருகின்றோம். எல்லாமே வணிகமயமாகிப் போய்க்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், எமது சொந்த (நேரம், பணம்) அர்ப்பணிப்பில் மாத்திரமே தங்கியிருக்கும் 'வானவில்' பத்திரிகை தடங்கல்கள் இல்லாமல் வெளிவர முடியாது. 'வானவில்' கனடாவில் அச்சுப்பதிப்பில் இலவசமாக விநியோகம் செய்யப்படுவதோடு, பலருக்கு தபாலிலும் மின்னஞ்சலிலும் அனுப்பப்படுகின்றது என்பது தெரிந்ததே. இதனால் எங்களுக்கு நேரடியாகவும் தொலைபேசி மற்றும் தபால், மின்னஞ்சல் வாயிலாகவும் ஊக்குவிப்புகளோடு விமர்சனங்களும் வருகின்றன. பலரது விமர்சனங்களை உள்வாங்கி பத்திரிகையின் உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பில் சில மாற்றங்களையும் செய்திருக்கிறோம்.

'வானவில்' இலங்கை, புலம்பெயர் நாடுகளென பல்வேறு தளங்களில் பல பாதிப்புகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது என்பது எமது கண்கூடாகத் தெரிகின்றது. மக்களில், ஊடகங்களில் மற்றும் அரசியல்வாதிகள் சிலரில் 'வானவில்'லில் வெளியாகும் கருத்துக்கள் பிரதிபலிப்பதைக் காணக்கூடயதாக இருக்கின்றது. இதனை எமது வாசகர்களும் எமக்கு அவ்வப்போது சுட்டிக்காட்டியும் உள்ளனர். 'வானவில்'லின் தொடர்ச்சியான வருகையையும், அதில் வெளியாகும் கருத்துக்களையும் பொறுக்க முடியாதவர்கள் எமது பத்திரிகையைத் திட்டித்தீர்ப்பதனையும் நாம் அவதானிக்கத் தவறவில்லை. எனினும் இதனையும் 'வானவில்'லில் வெளியாகும் கருத்துக்களின் பிரதிபலிப்பாகவே நாங்கள் பார்க்கிறோம். எனவே இவ்வாறனவர்களை, எமது முதுகிற்கு பின்னாலல்லாது 'வானவில்'லிற்கு நேரடியாக தமது எதிர்வினைகளை முன்வைக்குமாறு கோருகின்றோம்.

கடந்த 5 வருடத்தில் இலங்கை மற்றும் சர்வதேச நிலைமைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவைகளில் ஒரு பகுதியையாவது (முக்கியம் வாய்ந்தவைகளை) 'வானவில்' பதிவிலிட தவறவில்லை. நடப்பு நிகழ்வுகளையும், அது தொடர்பான கருத்துப் போக்குகளையும் மக்களிடம் கொண்டு செல்வதும், நடைமுறைச் சிக்கல்கள் (இலங்கை இனப்பிரச்சனை) தொடர்பாக விரிவான விவாதத்தைத் தூண்டுவதுமே 'வானவில்'லின் முக்கிய குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இலங்கையிலும் 'வானவில்'லினை பதிப்பித்து வெளியிட வேண்டுமென்ற குரல்கள் எங்களை வந்தடைந்த வண்ணமுள்ளன. 'வானவில்' இலங்கையை மையப்படுத்தியே வெளிவருவதால் இந்தக் குரல்களின் நியாயத்தன்மையை நாங்கள் உணருகின்றோம். அத்துடன் இலங்கையில் தமிழ் ஊடகங்கள் சுற்றிச்சுற்றி தமிழ் தேசியக் கொல்லையிலேயே நிற்பதால் மாற்று ஊடகம் ஒன்றிற்கான தேவையும் உள்ளது. 'வானவில்' என்ற பத்திரிகையின் வெற்றியே, அதில் வெளியாகும் கருத்துக்கள் இலங்கை மக்களிடையே ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி, மாற்றங்களை உருவாக்குவதிலேயே தங்கியுள்ளது. எனவே இலங்கையிலும் 'வானவில்' வெளிவர எங்களாலான எல்லாப் பிரயத்தனங்களையும் எடுப்போம்.

கடந்த 5 வருடங்களுக்காக எமது பத்திரிகையின் வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் உறுதுணையாக இருந்த தோழர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் 'வானவில்' ஆசிரியர் குழு நன்றியை தெரிவிக்கின்றது. எமது பத்திரிகையினை மென்மேலும் செழுமைப்படுத்த ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். தயங்காது முன்வையுங்கள்.

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# புலிகள் வடக்கு முஸ்லிம் மக்களை வெளியேற்றியதை மட்டும் கண்டனம் செய்தால் போதாது!



1990 ஒக்ரோபர் 30இல் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றி, இனச் சுத்திகரித்துச் செய்ததின் 25ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்து சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் கொழும்பில் கருத்தரங்கொன்றை நடாத்தியது.

இந்தக் கருத்தரங்கில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டு பேசினார். அவர் தனது உரையில், வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை புலிகள் வெளியேற்றியது இனச்சுத்திகரிப்பு என்று தெரிவித்து, அதற்காக வருத்தமும் தெரிவித்துக் கொண்டார். அத்துடன், இந்தச் செயலை வடக்கு மாகாணசபையும் கண்டனம் செய்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமெனவும் பின்னர் கேட்டிருந்தார். (சுமந்திரன் முன்னரும் ஒரு தடவை இதே மாதிரியான கருத்தை ஏறாவூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார்)

சுமந்திரனின் இந்தக் கருத்து, அவர் சார்ந்திருக்கும் தமிழரசுக் கட்சி அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவற்றின் உத்தியோபூர்வ கருத்தா அல்லது அவரது சொந்தக் கருத்தா என்பது தெரியவில்லை. அத்துடன், அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்ததிற்கு ஏதாவது அரசியல் பின்னோக்கம் இருக்கிறதா என்பதும் தெரியவில்லை. எதுஎப்படியிருப்பினும், முதல்தடவையாக தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாக புலிகளின் இந்த பாசிசத்தன்மை வாய்ந்த (ஹிட்லர் யூதர்களுக்கு எதிராகச் செய்தது போன்ற), மிலேச்சத்தனமான நடவடிக்கையைக் கண்டித்ததை வரவேற்காமல் இருக்க முடியாது.

## சாரங்கன்

ஆனால், சுமந்திரனின் வேண்டுகோளை ஏற்று வடக்கு மாகாணசபை இன்றுவரை இந்த நடவடிக்கைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் எதனையும் நிறைவேற்றவில்லை. 'வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்' எனத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வரும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம் மக்கள் விடயத்தில் மௌனம் காப்பது புதிராக இருக்கின்றது. (இதேபோன்ற ஒரு மௌனத்தைத்தான், மியன்மாரில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் சம்பந்தமாக அந்நாட்டின் ஜனநாயகத் தலைவி என வர்ணிக்கப்படும் ஆங் சாங் - சூயியும் கடைப்பிடிக்கிறார்)

வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சிதான் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றாவிட்டாலும், எதிர்க்கட்சியாவது ஒரு தீர்மானத்தை முன்வைத்திருக்கலாம். அப்பொழுது முதலமைச்சரினதும், அவரது சகாக்களினதும், ஆசாடபூதித்தனம் அம்பலத்துக்கு வந்திருக்கும். இன்னமும் காலம் கடந்துவிடாதபடியால், இனிமேலாவது அத்தகைய ஒரு தீர்மானத்தை வட மாகாணசபையின் எதிர்க்கட்சி கொண்டு வந்து, புலிகளால் நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு இழைத்த வரலாற்று கறையை நீக்க வேண்டும்

அதேநேரத்தில், சுமந்திரன் இந்தக் கண்டனத் தீர்மான விடயத்தை வடக்கு மாகாணசபையிடம் மட்டும் முன்வைத்தால் போதாது. தான் சார்ந்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமும் முன்வைத்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வைப்பது அவசியம். இந்தக் கருத்தைச் சொன்னதால், அண்மையில் சுமந்திரன் அவுஸ்திரேலியா சென்றிருந்த வேளையில் அங்குள்ள புலி ஆதரவாளர்களால் சுமந்திரனை நோக்கி 'துரோகி' என தூசிக்கப்பட்டாலும், சுமந்திரன் தனது கருத்தில் அவர் உளப்பூர்வமாக இருந்தால், அதைத் தொடர்ந்து வலியுறுத்துவது அவசியம். ஏனெனில் ஆண்டாண்டு காலமாக மற்றவர்களை நோக்கி விரல்களை நீட்டிய தமிழ் தலைமை, இனிமேல் தன்னை நோக்கி நீட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது.

புலிகளின் பாசிச நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், முஸ்லிம் மக்களை வெளியேற்றியமை ஒரு விடயம் மட்டுமே. அதைவிட இன்னும் ஏராளமான மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள்.

அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், அரச அதிகாரிகள், சமய – சமூகத் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள், சக போராளிகள், மாற்றுக் கருத்தாளர்கள் என, சுமார் 30,000 பேரை தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் கொன்றொழித்திருக்கிறார்கள்.

புலிகளின் அப்படியான செயல்களின் போது தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்போ, ஒருபோதும் அவர்களை நோக்கி ஒரு கண்டன வார்த்தை கூடச் சொன்னது கிடையாது. பதிலுக்கு, "புலிகள்தான்

தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க...

# சுரேஸ் பிரேமச்சந்திரனின் மாறுகண் பார்வை!

ஒருவருக்கு முழுமையாகக் கண் தெரியாவிட்டால் அவரைக் குருடர் என்று அழைப்பது வழமை. இன்னும் சிலருக்கு கண் தெரிந்தாலும் அவரது கண் 'வாக்குக் கண்'ணாக இருக்கும். சிலருக்கு 'மாலைக்கண்' என்றொரு குறைபாடு இருக்கும். அப்படியானவர்களுக்கு மாலை நேரங்களில் சில மணித்துணிகள் கண் பார்வையில்லாமல் போகும் அல்லது தெளிவான பார்வையில்லாமல் இருக்கும். இன்னும் சிலரை 'மாறுகண்' உள்ளவர்கள் என அழைப்பார்கள்.

இந்த மாறுகண் உள்ளவர்களுக்கு கண் பார்வை இருக்கும். ஆனால் ஒன்று இன்னொன்றாகத் தெரியும். இந்தப் பார்வைச் சங்கதி பௌதிகரீதியான எமது கண் பாாவையில் உள்ள குறைபாடு மட்டும் என்றில்லை. ஒருவருடைய சிந்தனையில் அல்லது ஒரு விடயம் குறித்த பார்வையில் குறைபாடு இருந்தாலும், அதையும் சிலேடையாக அப்படிக் குறிப்பிடுவதுண்டு.

எதற்காக இந்தச் பீடிகைகள் எல்லாம் என சிலர் முணுமுணுப்பார்கள் என்பது உண்மையே. ஆனால் நமது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் ஒரு பிரிவின் செயலாளர் நாயகமுமான திருவாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் சில கதைகளைக் கேட்கும் போது, இப்படி சில விடயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய சூழல் உருவாகி விடுகிறது.

இலங்கையில் போர்க்காலத்தில் வரணி பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தின் 526ஆவது படையணியின் முகாமில் சித்திரவதைகள் இடம் பெற்றதாக பிரேமச்சந்திரன் தனது 'பேஸ் புக்' என்ற முகநூலில் குறிப்பிட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இதுபற்றி செய்தி வெளியிட்ட யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழ், இராணுவ முகாம் இருந்த கட்டிடத்தின் சில புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னரும் பிரேமச்சந்திரன், இலங்கை இராணுவம் சில இரகசிய சித்திரவதை முகாம்களை நடாத்தி வருவதாகவும், அதில் தமிழர்களான புலி சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் எனவும் குற்றஞ்சாட்டியிருந்தார். அவரது குற்றச்சாட்டை முன்னைய அரசாங்கத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் மட்டுமின்றி, புதிய அரசாங்கத்தின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவும் மறுத்திருந்தார்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் ஒரு பக்கத்தில் புலிகளும், மறுபக்கத்தில் இலங்கை அரசாங்கப் படைகளும் எதிரெதிராக நின்று மிக நீண்ட காலம் போரிட்டுள்ளன. இடையே சுமார் மூன்று வருட காலம் புலிகளுக்கும் இந்திய 'அமைதிப்படை'க்கும் கூட யுத்தம் நிகழ்ந்தது.



இரு தரப்பினருக்கிடையே யுத்தம் நடைபெறும் பொழுது, அங்கே வழமையான ஜனநாயக நடைமுறைகள் எல்லாமே காணாமல் போய்விடும் என்பது சிறு பிள்ளைக்கும் தெரியும். போரில் ஈடுபடுபவர்கள் அகிம்சையைப் போதித்த காந்தி எழுதிய 'சத்தியசோதனை' புத்தகத்தால் ஒருவரை ஒருவர் வருடிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆயுதத்தால் மோதுவதுடன் நின்றுவிடாது, பல சித்திரவதை முறைகளையும் எதிரி மீது கையாள்வது வழமை.

அந்த வகையில், இலங்கை இராணுவத்தினரோ, இந்திய இராணுவத்தினரோ தம்மால் பிடிக்கப்பட்ட எதிரிகள் மீதும், எதிரிக்கு ஆதரவானவர்கள் என்று கருதப்பட்ட பொதுமக்கள் மீதும் நிச்சயமாக பலவிதமான சித்திரவதைகளைப் பிரயோகத்திருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அதற்குப் பல உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகளும் உண்டு. இலங்கை அரசு நியமித்த ஆணைக்குழுக்களிடமே அது பற்றிய முறைப்பாடுகள் பொதுமக்களால் நிறையச் செய்யப்பட்டு, ஆணைக்குழுவும் பலவற்றை ஏற்றுக் கொண்டுள்ளது.

மறுபக்கத்தில், இலங்கை, இந்திய இராணுவங்கள் இப்படிச் செயற்பட்டிருக்கையில், யுத்தத்தில் ஈடுபட்ட மறுதரப்பான பிரபாகரன் வளர்த்த (உறுமும்) புலிகள் குழந்தைப் பிள்ளைகளாக எதுவும் செய்யத் தெரியாமல் விரல்களைச் சூப்பிக் கொண்டிருந்தார்கள் என்று யாரும் சொன்னால், அதை சிறுபிள்ளை கூட நம்பாது. ஆனால், பிரேமச்சந்திரன் அந்தக் கணக்காகவே மக்களுக்குத் தொடர்ந்து கதை அளந்து வருகிறார்.

## கப்பித்தான்

சுரேஸ் பிரேமச்சந்திரன் ஒரு ஆயுதப் போராட்ட இயக்கத்தில் முக்கிய பொறுப்பு வகித்தவர் என்ற ரீதியில், அவரது இயக்கம் உட்பட எல்லாத் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் செய்த படுகொலைகள், சித்திரவதைகள், ஆட்கடத்தல்கள், பணக்கப்பம் உட்பட சகல மனித உரிமை மீறல் செயல்களையும் நன்கறிந்தவர்.

மற்ற எல்லா இயக்கங்களையும் புலிகள் தடை செய்து அதன் உறுப்பினர்களை வகைதொகையில்லாமல் கொன்றொழித்துவிட்டுத் தாமே தனிக்காட்டு ராஜாவாக இருந்த காலத்தில், புலிகள் வடக்கு கிழக்கில் வைத்திருந்த எண்ணற்ற சித்திரவதை முகாம்கள் பற்றியும், அதில் யார் யார், எவ்வளவு தொகையான பேர் அவர்களால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள் என்ற விபரமும் பிரேமச்சந்திரனுக்குத் தெரியாததல்ல.

அதைப்பற்றியெல்லாம் பிரேமச்சந்திரனோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இதர தலைவர்களோ ஒருபோதும் வாய் திறப்பதில்லை. ஆனால் அடிக்கடி அரச சித்திரவதைகள் பற்றி மட்டும் பேசுவது எந்த வழியில் ஜனநாயகமானது.

அதுவும் வரணியில் இருந்த இராணுவத்தினரின் சித்திரவதை முகாம் பற்றித் தெரிந்த பிரேமச்சந்திரனின் கண்களுக்கு, அதே வரணியில் எருவன் என்ற இடத்தில் புலிகள் அதி உச்சபட்ச சித்திரவதைகள் நடந்த 'இறைச்சிக் கடை' அல்லது 'மேல்வீடு' என்று அழைக்கப்பட்ட மிக முக்கியமான சித்திரவதைக்கூடம் இருந்த விடயம் எப்படித் தப்பியது? அல்லது ஆனைக்கோட்டையில் புலிகளின் சிறைக்கூடப் பொறுப்பாளர் காந்தி என்பவனின் நேரடிக் கண்காணிப்பில் இருந்த ராங் - 2 (Tank – 2) என்ற சித்திரவதை முகாம் எப்படித் தெரியாமல் போனது? புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளன் ஒவ்வொருவனின் தலைமையிலும் ஒவ்வொரு சித்திரவதை முகாம்கள் இறுதிக்கட்டப் போர் வரை செயல்பட்டன என்பதை எப்படி பிரேமச்சந்திரன் மறைக்க முடியும்?

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்திய அமைதிப்படைக்கும் புலிகளுக்கும் யுத்தம் நடந்த காலத்தில் பிரேமச்சந்திரன் முக்கிய பொறுப்பு வகித்த ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் இந்தியப் படையுடன் சேர்ந்து செயல்பட்டது. அந்தக் காலத்தில் இந்திய அமைதிப்படையால் புலிகள் மீது மட்டுமின்றி, தமிழ் பொதுமக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட சித்திரவதைகள், கொலைகள், பெண்கள் மீதான பாலியல் வதைகள் பற்றி ஏன் பிரேமச்சந்திரன் பிரஸ்தாபிக்கவில்லை.

அந்தக் காலகட்டத்தில் தமிழ் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்களால் 'மண்டையன் குழு' என்றொரு கொலைக்குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பலரைத் தேடிப்பிடித்து 'மண்டையில்' போட்டதே? அந்தக் குழுவைப் பற்றி ஏன் பிரேமச்சந்திரன் பேசுகிறாரில்லை?

இவையெல்லாவற்றையும் வைத்துப் பார்க்கையில், பிரேமச்சந்திரனின் பார்வையில் ஏதோ ஒரு கோளாறு இருப்பது புலனாகிறது. அது ஒற்றைக்கண் பார்வையா அல்லது மாறுகண் பார்வையா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். *

3ம் பக்கத்தொடர்ச்சி…

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்" என்று சொல்லி அவர்களது மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளித்து வந்திருக்கிறார்கள்.

எனவே, புலிகளின் அந்த நடவடிக்கைகளையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு காலம் கடந்தாவது கண்டனம் செய்து, தன்மீதான கறையைச் சுத்தம் செய்வது அவசியம். அவ்வாறு செய்யாவிட்டால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன்னைத் தமிழ் மக்களின் பிரதிநிதி என்றோ, ஜனநாயகக் கட்சி என்றோ சொல்லிக் கொள்வதற்கு அருகதையில்லை.

இந்த விடயத்திலும் சுமந்திரன் முன் கையெடுத்துச் செயல்படுவாரா? *

# முதுபெரும் புகைப்பட ஊடகவியலாளர் ச.கதிரவேலு காலமானார்!

யாழ்ப்பாணத்தின் முதுபெரும் பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளரான சங்கரகம்பன் கதிரவேலு தமது 82ஆவது வயதில் சைக்கிள் விபத்து ஒன்றில் நொவம்பர் 19ஆம் திகதி காலமானார்.

மலையக தமிழ் வம்சாவழியைச் சேர்ந்த கதிரவேலு, யாழ்ப்பாணத்திலேயே நீண்ட காலம் வசித்து, ஏறத்தாழ ஐந்து தசாப்தங்களாக பத்திரிகைப் புகைப்படத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார். பிற்காலத்தில் அவர் பல்வேறு ஊடகங்களுடன் செயற்பட்டாலும், மிக நீண்டகாலம் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் 'தினகரன்' பத்திரிகைக்காகவே பணியாற்றினார்.

அவரது புகைப்படத் தொகுப்பில், வரலாற்று நிகழ்வுகளான 1961இல் தமிழரசுக்கட்சி நடாத்திய சத்தியாக்கிரகப் படங்கள், 1960களில் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய மாவிட்டபுர கந்தசுவாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டக் காட்சிகள், 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டுப் படங்கள் என்பனவற்றுடன், யுத்தகால காட்சிகள் அடங்கிய படங்களும் உள்ளடங்கும்.

அவரது இழப்பு, யாழ்ப்பாண ஊடகத்துறையின் ஒரு காலகட்ட சாட்சியத்தின் முடிவாகும்.

# படைப்பாளி ப.ஆப்டீன் மறைவு!

மலையகத்தைச் சேர்ந்தவரும், ஓய்வுபெற்ற ஆசிரியரும், மனித நேயப் படைப்பாளியுமான ப.ஆப்டீன் தமது 77ஆவது வயதில் ஒக்ரோபர் 9ஆம் திகதி காலமானார்.

அவரது மூன்று சிறுகதைத் தொகுப்புகள் "இரவின் இராகங்கள்", "நாம் பயணித்த புகைவண்டி", "கொங்காணி" என்ற பெயர்களில் வெளிவந்துள்ளன. "கருக்கொண்ட மேகங்கள்" என்ற தலைப்பிலான நாவல் சிங்கள - தமிழ் - முஸலிம் மக்களின் ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டும் ஒரு நாவலாகும்.

மலாய் சமூகத்தைச் சேர்ந்த ஆப்டீன், அந்த சமூகத்தை அடையாளப்படுத்தும் வகையிலான நாவல் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கும்போதே காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. மனித நேயப் படைப்பாளியான அவரது மறைவு, குறிப்பாக அந்தச் சமூகத்தின் மத்தியிலும், பொதுவாக ஈழத்து தமிழ் இலக்கிய உலகிலும் ஒரு இடைவெளியை ஏற்படுத்திவிட்டுள்ளது. *

# இலங்கையை சர்வதேச நாணய நிதியத்திடம் அடகு வைக்க

# மைத்திரி – ரணில் அரசு திட்டம்!

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் (International Monetary Fund) முன்னேற்பாட்டு திட்ட ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து, மிக ஆபத்தான சமிக்ஞை ஒன்றை வெளிப்படுத்தி இருக்கிறார்.

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் போது உரையாற்றிய பிரதமர் ரணில், அடுத்த ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். (ISIS) தீவிரவாதிகளால் மத்திய கிழக்கில் ஏற்படக்கூடிய பொருளாதார தாக்கத்தால் இலங்கை பாதிக்கப்படாமல் இருப்பதற்கே, இந்த ஒப்பந்தம் செய்யப்பட உள்ளதாக விளக்கம் அளித்துள்ளார்.

ஏற்கெனவே படுமோசமான, மக்கள் விரோத வரவு செலவுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ள மைத்திரி – ரணில் அரசு, தற்போது சர்வதேச வட்டிக் கடைக்காரர்களான சர்வதேச நாணய நிதியத்திடமும், உலக வங்கியிடமும் இலங்கையை அடகு வைக்கும் கைங்கரியத்தில் இறங்கி உள்ளதையே ரணிலின் அறிவிப்பு எடுத்துக் காட்டுகிறது.

ரணில் எதிர்வு கூறுவது போல, அடுத்தாண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மத்திய கிழக்கில் குழப்பத்தை ஏற்படுத்துவார்கள் என, எந்தவொரு மத்திய கிழக்கு நாடோ அல்லது இதர நாடுகளோ இதுவரை எவ்வித அச்சத்தையும் பகிரங்கமாக வெளியிட்டதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க ரணிலுக்கு மட்டும் இந்த 'ஐ.எஸ்.ஐ.எஸ். காய்ச்சல்' எப்படி பிரத்தியேகமாக ஏற்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை.

ரணில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை இவ்வாறு மிகைப்படுத்திக் கருதுவாரானால், அமெரிக்கா தலைமையிலான வலுவான மேற்கு நாட்டு அணியும், ரஸ்யாவும் அந்த இஸ்லாமிய




தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்து வரும் நடவடிக்கைகளால் அவர்களை முறியடிக்க முடியும் என, உலகம் முழுவதும் உள்ள நம்பிக்கையை ரணில் மட்டும் நம்ப மறுக்கிறார் என்று அர்த்தமாகிறது.

**மகேஸ்**

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் முன்னேற்பாட்டு ஒப்பந்தம் செய்வதற்கு ரணில் சொல்லும் காரணம் ஏற்புடையதன்று, பொய் என்று தெரிகிறது. இந்த ஒப்பந்தம் செய்வதன் நோக்கம், இலங்கையின் பொருளாதாரத்தை தற்போது இருக்கும் பாதியளவான சுயாதாரத்திலிருந்தும் கூட நீக்கி, ஏகாதிபத்திய சர்வதேச நிதி நிறுவனங்களின் தேர்ச்சில்லுடன் இறுகப் பிணைப்பதற்காகவே. ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளைப் பொறுத்தவரை, இது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல.

*1953*இல் டட்லி சேனநாயக்கவைப் பிரதமராகக் கொண்டிருந்த அன்றைய ஐ.தே.க. அரசில் நிதியமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இதே வேலையைத்தான் செய்தார். அவர் அன்றைய உலக வங்கி நிர்வாகத்தின் ஆலோசனையைக் கேட்டு, மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்த இலவச அரிசியை நிறுத்தினார், தபால் - தந்தி – போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தினார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கிய மதிய உணவான பணிசை நிறுத்தினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இடதுசாரிக் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் 1953 ஓகஸ்ட் 12ஆம் திகதி மாபெரும் ஹர்த்தால் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தன. அந்த போராட்ட அழைப்பை ஏற்று முழுநாடும் கொந்தளித்து எழுந்தது. அதன் காரணமாக டட்லியின் அரசாங்கம் செயற்பட முடியாமல் போய், இறுதியில் அவர் தனது பிரதமர் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. பிரதமர் ரணிலின் அரசாங்கம் இன்று எடுத்து வரும் நடவடிக்கைகளும் இலங்கையில் மீண்டும் ஒரு ஹர்த்தால் போராட்டத்தை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில், எஸ்.டபிள்யு,ஆர்.டி. பண்டாரநாயக்கவாலும், அவரது துணைவியார் சிறிமாவோ பண்டாரநாயக்கவாலும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியத்தில் கட்டி வளர்க்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும், இன்றைய ஐ.தே.க. அரசுடன் இணைந்துள்ள அந்தக் கட்சியின் ஒரு பகுதியினரும், எப்படி ரணில் அரசின் இந்த மக்கள் விரோத, ஏகாதிபத்திய சார்பு நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டு அமைதியாக இருக்கிறார்கள் என்பதுதான். *

பாடசாலைகளில் அறிவியலைப் போதிப்பதும் சரியான முறையில் இல்லை. பரீட்சைக்காக மனப்பாடம் செய்து தேர்வு முடிந்தவுடன் மறந்துவிடுவதும் அறிவியல் அல்ல.

**– பேராசிரியர் ஜயந்த் நர்லிகர்**

# வரவு செலவுத் திட்டத்துக்கு சகல துறையினரும் எதிர்ப்பு!




**மைத்திரி – ரணில் அரசின் சார்பில் நிதியமைச்சர் ரவி கருணநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நடப்பாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு நாட்டின் அனைத்துப் பிரிவினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.**

ஜனாதிபதி மைத்திரியின் நிர்ப்பந்தம் காரணமாக அவர் தலைமைதாங்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரதும், எப்பொழுதும் மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாப்பதிலேயே கருத்தாக இருக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் ஆதரவுடனும், மூன்றில் இரண்டு இரண்டு பெரும்பான்மையுடன் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என அரசாங்கம் பீற்றிக் கொண்டாலும், நிலைமை புயலுக்கு முந்தைய அமைதியாகவே காணப்படுகின்றது.

வெட்கக்கேடு என்னவெனில், இந்த மக்கள் விரோத வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்க வேண்டிய நிலையில் இருக்கின்ற உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சிப் பதவியை வைத்திருக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதை ஆதரித்து வாக்களிக்க, ஒன்றிணைந்த உண்மையான எதிர்க்கட்சியினரே அதை எதிர்த்து வாக்களித்ததுடன், நிதியமைச்சர் ரவி கருணநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு ஏற்கெனவே பல்வேறு தொழிற்சங்கங்களும் தமது வன்மையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அதுமாத்திரமின்றி, இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக விவசாயிகளும் ஆங்காங்கே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

**பிரணவன்**

வழமையாக தொழிலாளர்கள், விவசாயிகள்தான் இந்தவிதமான வரவுசெலவுத் திட்டத்துக்கு எதிராக எதிர்ப்பு வெளியிடுவதுண்டு. ஆனால், இம்முறை வங்கி ஊழியர் சங்கமும் தனது எதிர்ப்பை வெளியிட்டு, யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளது. அதுமாத்திரமின்றி, நிர்வாக உத்தியோகத்தர்கள், தகைமைசார் தொழில் நிபுணர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் போன்றோரை உள்ளடக்கிய 20இற்கும் அதிகமான அவர்களது சங்கங்களும் இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராகத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

சுருக்கமாகக் கூறுவதானால், ஐ.தே.க. பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் பெரும் முதலாளிகள், தரகு முதலாளிகள், வெளிநாட்டுக் கொம்பனிகள் தவிர்ந்த, நாட்டின் அனைத்துத் தரப்பு மக்கள் பிரிவினரும் இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த எதிர்ப்பின் காரணமாக, அரசில் ஜனாதிபதி மைத்திரியினதும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கவினதும் நிர்ப்பந்தம் காரணமாக அங்கம் வகிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரிவினர் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்த மக்கள் விரோத வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்ததிற்காக, அவர்கள் தமது ஆதரவாளர்களால் கடுமையாக விமர்ச்சிக்கப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

**அதுமட்டுமின்றி, முழுக்க முழுக்க ஐ.தே.க. பாணியில் தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக, ஜனாதிபதி மைத்திரியும் விசனத்துக்குள்ளாகியுள்ளதாக உள்ளகத் தகவல்கள் ஊடகங்களுக்குக்** கசிந்துள்ளன. அதன் காரணமாக, அரசுக்குள் பிளவான ஒரு நிலையும் தோன்றியுள்ளது. ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் எதிர்ப்பில் இருந்து தாம் தப்புவதற்காக, எல்லாப் பழிகளையும் ஜனாதிபதி மைத்திரி மீது போடுவதற்கு முயன்று வருகிறார்.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதானால், பிரதமரையும் நிதியமைச்சரையும் மாற்ற வேண்டும் அல்லது சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்ற கருத்து, அரசின் உள்ளும் புறமும் உள்ள சுதந்திரக் கட்சியினர் மத்தியில் உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது. *

## தமிழில் முதல் வந்த பேசும்படம்!

'காளிதாஸ்' என்ற படம்தான் தமிழில் வெளிவந்த முதல் (1931) பேசும் படமாகும். அதற்கு முதல் வந்த படங்கள் எல்லாமே ஒலி இல்லாத 'ஊமைப் படங்கள்'. இப்படத்தைத் தொடர்ந்து காலவரிஸி, பாரிஜாத புஸ்பஹாரம், ராமாயண், ஹரிச்சந்திரா, கோவலன், சத்தியவான் சாவித்திரி, சீதா கல்யாணம், நந்தனார், பிரகலாதா, வள்ளி திருமணம், ஸ்ரீ கிருஸ்ணலீலா, ஸ்ரீ கிருஸ்ண முரளி, சக்குபாய், சம்பூர்ண கோபாலன், சகுந்தலா, சதிசுலோச்சனா, சீதாவனவாசம், தசாவதாரம், திரௌபதி வஸ்திராபஹரணம், பவளக்கொடி, பாமா விஜயம், லவகுசா, ஸ்ரீனிவாச கல்யாணம் ஆகிய பேசும் படங்கள் வந்தன. எல்லாமே சமய அல்லது புராணப் படங்கள்.

இந்தப் படங்களில் நடித்தவாகள் அந்தக்காலத்தில் புகழ்பெற்ற நடிகர்களாக இருந்த பி.ரங்காச்சாரி, எம்.ஆர்.கிருஸ்ணமூர்த்தி, சி.எம்.துரை, டி.பிராஜலட்சுமி, ஆர்.பி.லட்சுமிதேவி, ரத்னாபாய், சரசுவதிபாய், கேட்டி.ருக்மணி, எம்.எஸ்.விஜயாள், பி.எஸ்.சீனிவாசராவ், எஸ்.ராஜம், சிரிப்பு நடிகர்கள் எம்.எஸ்.முருகேசன், எம்ஆர்.சுப்பிரமணிய முதலியார், கிளவுன் சுந்தரம், குஞ்சிதபாதபிள்ளை, எம்.எஸ்.ராமச்சந்திரன், ஜோக்கர் முருகன் ஆகியோராவார்.

(**தகவல்**: சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியை அன்புக்கொடி நல்லதம்பி அவர்கள், நகைச்சுவை நடிகர் காலஞ்சென்ற என்.எஸ். கிருஸ்ணன் நூற்றாண்டு நிறைவையொட்டி எழுதி வெளிட்ட **'சமூக விஞ்ஞானி கலைவாணர்'** என்ற நூல்)

## வாழ வழியற்றோர்...

உலக சனத்தொகையில் (700 கோடி) 9.6 சத வீதமானோர் (சுமார் 73 கோடி பேர்) வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

# நறுக்கு நொறுக்கு NUTS

## இந்தியாவில் தடை செய்யப்பட்ட முதல் நூல்!

இப்போதெல்லாம் இந்தியாவில் ஊருக்கு ஊர் பஞ்சாயத்துக் கூடி எழுத்தாளர்களின் கருத்துச் சுதந்திரக் குரல்வளையை நசுக்கும் நடவடிக்கை பகிரங்கமாகவே நடந்து வருகிறது. ஆனால் இந்தக் கருத்துச் சுதந்திர மறுப்பை பெரிய அளவில் ஆரம்பித்து வைத்தவர்கள் இந்தியாவை தமது கிடுக்கிப் பிடியில் வைத்து ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள்தான்.

பங்கிம் சந்திரர் என்ற வங்காள எழுத்தாளர் மக்கள் அபிமானம் பெற்ற பிரபல எழுத்தாளர். அவர் 'ஆனந்தமடம்' என்றொரு அருமையான நாவலை எழுதினார். அந்த நாவலில் இந்திய மக்களின் சுதந்திர தாகத்தை ஏகோபித்து வெளிப்படுத்திய 'வந்தே மாதரம்' என்ற சுதந்திர கீதம் இடம் பெற்றதற்காக, அந்த நூலுக்கு பிரித்தானிய காலனித்துவ கொடுங்கோல் அரசு தடை விதித்தது. இந்தியாவில் தடை செய்யப்பட்ட முதல் நூல் இதுதான்!

## கருத்துக் கணிப்பு

PEW என்ற நிறுவனம் 2013இல் உலகின் 37 நாடுகளில் நடாத்திய ஒரு கருத்துக் கணிப்பில், சீனாவே இன்றைய உலகின் முதல்தர சக்திமிக்க நாடு எனப் பெரும்பாலானவர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர். இதன்போது கருத்துத் தெரிவித்த அமெரிக்கர்களில் 50 வீதமானோரும் இதே கருத்தையே தெரிவித்துள்ளனர்.

## சாய்ந்தும் சாயாத கோபுரம்!

இத்தாலியில் 800 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட 182 அடி உயரமுள்ள சாய்ந்த நிலையிலுள்ள பைசா கோபுரம் (Pisa Tower) உலக அதிசயங்களில் ஒன்றாகும். இந்தக் கோபுரம் பல ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து வருவதை அவதானித்த நிபுணர்கள், பல ஆண்டுகள் முயற்சித்த பின்னர் தொடர்ந்து சரிவதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

எட்டு மாடிகள் கொண்ட இக்கோபுரம் வண்டல் மண்ணினாலும், களி மண்ணினாலும் கட்டப்பட்டதாகும். 800 ஆண்டுகளாக மழை, வெள்ளம், புயல், மின்னல் போன்ற இயற்கை அனர்த்தங்களுக்குத் தாக்குப்பிடித்து நின்று வருகிறது.

கோபுரத்துக்கு அடியில் உள்ள மண்ணையும், தரைக்குக் கீழே உள்ள நீர் மட்டத்தையும் சீர்செய்ததின் மூலம் கோபுரம் தொடர்ந்து சரிவதை நிபுணர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

## ஈரானின் சக்தி வளம்

உலக அளவில் கச்சா எண்ணெய் கையிருப்பில் ஈரான் நான்காவது இடத்திலும், இயற்கை வாயு கையிருப்பில் இரண்டாம் இடத்திலும் இருப்பதாக அமெரிக்க சக்திவள நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆனால் ஈரான் மீது அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் விதித்த பொருளாதாரத் தடை காரணமாக 2012இன் பின்னர் ஈரானின் எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி பாதியாகக் குறைந்துள்ளது. அதாவது 2013 – 14 நிதியாண்டில் 56 பில்லியன் (Billion) டொலர்கள் குறைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கின்றது.

## ரைற்ரானிக் கப்பலின் மதிய உணவுப்பட்டியலின் பெறுமதி!

1912 ஏப்ரல் 12ஆம் திகதி 2,224 பேருடன் பயணம் செய்த ரைற்ரானிக் (Titanic) என்ற கப்பல் பனிப்பாறையொன்றுடன் மோதி, அதன் காரணமாக அதில் பயணம் செய்த அத்தனை பேரும் மரணத்தைத் தழுவிய சோக நிகழ்வு வரலாற்றின் ஏடுகளில் சாகாவரம் பெற்ற செய்தியாகப் பொறிக்கப்பட்டுவிட்டது.

அந்த சோக நிகழ்வு சம்பந்தமாக எத்தனையோ நூல்களும், திரைப்படங்களும் வந்துவிட்டன. அதில் பயணம் செய்தவர்களின் பொருட்கள் காலத்துக்காலம் கடலிலும் கரையிலுமாக மீட்கப்பட்டு வந்துள்ளன. அவ்வாறு மீட்கப்பட்ட பொருட்களில் ஒன்று, அந்தக் கப்பலின் ஒரு நாளைய மதிய போசன (Lunch Menu) விபரப்பட்டியலாகும். அந்த விபரப்பட்டியல் அண்மையில் நடைபெற்ற ஏலவிற்பனையொன்றில் 88,000 டொலர்களுக்கு விலை போயுள்ளது.

## ஆபத்தான அணுஆயுதக் கடத்தல் முயற்சி!

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள கடத்தல்காரர்கள் ISIS உட்பட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு அணுஆயுதப் பொருட்களை விற்பதற்கு 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுத்த நான்கு முயற்சிகளை அமெரிக்க சமஸ்டி புலனாய்வு (FBI) அதிகாரிகள் முறியடித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## 6 கோடி அகதிகள்!

சிரியாவில் இருந்து வெளியேறும் அகதிகள் உட்பட பல நாடுகளில் இருந்தும் உலகம் முழுவதும் இடம் பெயர்ந்து செல்லும் அகதிகளின் எண்ணிக்கை சுமார் 60 மில்லியன் (6 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது.

## இதை யாரிடம் சொல்லி அழ?

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், அந்த அரசு கருத்துச் சுதந்திரத்தின் மீது நடாத்தி வரும் தாக்குதலுக்கு எதிராகவும், அதன் இந்துத்துவ மதவெறி கொள்கைகளுக்கு எதிராகவும், மூடக் கருத்துக்களைப் பரப்புவதற்கு எதிராகவும், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிவுத்துறையினர் கொதித்தெழுந்து போராடி வருகின்றனர்.

இந்த நிலைமையில் 100 மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டின் பிரதமரான மோடி, இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாட்டில் பேசும்போது, விநாயகருக்கு யானைத் தலை பொருத்தப்பட்டதை சுட்டிக்காட்டி, இந்தியர்களுக்கு பண்டைய காலத்திலேயே உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தெரிந்திருக்கிறது எனப் பேசியிருக்கிறார்! அவருடைய இந்தப் பொன்னான கண்டுபிடிப்பை எங்கே பொறித்து வைப்பது?

## எய்ட்ஸ் என்றால் என்ன?

எச்ஐவி (HIV) என்ற கிருமியே எய்ட்ஸ் நோய்க்குக் காரணமாகும். இந்த கிருமி ஒருவரிடம் இருந்து மற்றவரு க்கு பரவும் கிருமியாகும். எச்ஐவி கிருமி நமது உடலுக்குள் வந்ததும், அது தனது இனப்பெருக்கத்தை செய்து உடல் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்கிறது. பின்னர் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தியை சிறிது சிறிதாக அழித்து விடுகின்றன. இந்த நிலையைத்தான் எய்ட்ஸ் நோய் என்கிறார்கள்.

பொதுவாக எச்ஐவி கிருமி மனித உடலில் உள்ள எல்லா திரவங்களிலும் படிந்திருக்கிறது என்றாலும் கூட, இரத்தம், விந்து, பெண்ணுறுப்புகளில் உருவாகும் திரவம், தாய்ப்பால் ஆகியவற்றின் வாயிலாகத்தான் பரவுகின்றது. எய்ட்ஸ் என்பது ஒரு நிலை, அது நோய் அல்ல.

## ஒரே நேரத்தில் 6,000 கைதிகள் விடுதலை!


அமெரிக்க சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஒரே நேரத்தில் 6,000 கைதிகளை விடுதலை செய்வதற்கு அந்நாட்டு நீதியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பெரும்பாலும் வன்முறையில் ஈடுபடாத போதைப்பொருள் குற்றவாளிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட உள்ளனர். அமெரிக்கச் சிறைகளில் நிலவும் இட நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே இந்த ஏற்பாடு எனக் கூறப்படுகிறது.

## போபால், டிசம்பர் 3, 1984

நள்ளிரவு. கடுங்குளிர். நாய்கள் ஓலமிடுகின்றன. ஊர் பாதித் தூக்கத்தில் எழுகிறது. மூச்சுத் திணறுகிறது. காற்றுக்காகக் கதவைத் திறந்து வெளியே வருபவர்கள் காற்றில் எரிச்சலை உணர்கிறார்கள். இன்னதென்று யோசிக்கும் முன் 'யூனியன் கார்பைடு' தொழிற் சாலையிலிருந்து அபாயச் சங்கு ஒலிக்கிறது. ஓடுகிறார்கள். சரிகிறார்கள். சாகிறார்கள். விடிந்தபோது வீதியெங்கும் மனிதப் பிணங்களின் எண்ணிக்கைக்கு இணையாக கால்நடைகள், பறவைகளின் உடல்கள். அன்று தொடங்கி போபால் மக்கள் போராடுகிறார்கள். உலகின் மிகவும் மோசமான தொழிற்சாலை விபத்தாகக் கருதப்படும்

இதில் இதுவரை 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கலாம் என கருதப்படுகிறது. ஆனால், 5,295 பேர் மட்டுமே இறந்ததாக மாநில அரசின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரம் கூறுகிறது. 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிறக்கும் ஒவ்வொரு 25-வது குழந்தையும் குறைபாடுடைய குழந்தையாகப் பிறக்கிறது.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு உண்மையான எதிர்க்கட்சி அல்ல! - போட்டுடைத்தார் செல்வம் அடைக்கலநாதன்!!




தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வாய் தவறியோ என்னவோ ஒரு விடயத்தைப் போட்டு உடைத்திருக்கிறார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீது உரை நிகழ்த்திய அவர், 'அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இழுத்தடித்து வருகிறது. அப்படியான நிலைமை தொடருமேயானால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து கொடுத்து வரும் ஆதரவை வாபஸ் வாங்க வேண்டி வரும்' என்ற சாரப்பட எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

அடைக்கலநாதனின் உரையில் இரண்டு முக்கியமான விடயங்கள் உள்ளடங்கி இருக்கின்றன.

அதில் ஒன்று, அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஏதோ சில வாக்குறுதிகள் வழங்கி இருக்கிறது என்பது. இரண்டாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சி அந்தஸ்தில் இருந்துகொண்டு, மறுபக்கத்தில் அரசின் துணைக் கட்சியாகவும் செயல்படுகின்றது என்பது.

எப்படி இலங்கையில் ஆண்டாண்டு காலமாக கீரியும் பாம்புமாக இருந்த பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவும் இணைந்து 'அர்த்தநாரீஸ்வர' (சைவசமய கருத்தில் சிவன் பாதி உமை பாதி) நிலையில் ஒரு அரசாங்கத்தை நடாத்தி வருகின்றனவோ, அதுபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சியாகவும், அரசாங்க சார்புக் கட்சியாகவும் இருந்து வருவதைத்தான், அடைக்கலநாதனின் உரை தெளிவாக்கியிருக்கிறது. உலகில் வேறெங்கும் இல்லாத புதுமையான ஒரு நிலை இது.

அவர்கள் என்ன வடிவத்தில் இருந்துகொண்டும் தமது வயிற்றுப் பிழைப்பை நடாத்தட்டும். ஆனால் தமிழ் மக்களுக்காக 'வானத்தை வில்லாக வளைப்போம், பூமியைக் கயிறாகத் திரிப்போம், காற்றுக்கு வேலி போடுவோம்' என, தாறுமாறான வாக்குறுதிகளை தேர்தல் காலங்களில் வழங்கி, தமிழ் மக்களை ஏமாற்றி நாடாளுமன்றம் சென்ற கூட்டமைப்பினர், தமிழ் மக்களுக்கு சில விடயங்களை தெளிவுபடுத்துவது அவசியம்.

முதலாவது விடயம், அடைக்கலநாதன் சொன்ன தமிழ் மக்களுக்காக செய்வேன் என அரசு வாக்குறுதி அளித்த விடயங்கள் என்னென்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை என்ன அடிப்படையில் ஆதரிக்கிறீர்கள் என, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கீழ்மட்ட ஆதரவாளர்களும் தமிழ் பொதுமக்களும் கூட்டமைப்புத் தலைமையை நோக்கி கேள்வி எழுப்பியபோது, எதிரணி ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமக்கும் சில இரகசியமான உடன்பாடுகள் இருப்பதாகவும், அதை இப்பொழுதே பகிரங்கப்படுத்தினால், மகிந்த ராஜபக்ச தரப்பு அதைப் பயன்படுத்தி இனவாதப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வெற்றி பெற்று விடுவார்கள் என்றும், தேர்தல் முடிந்த பின்னர் அந்த உடன்பாடு வெளியிடப்படும் என்றும், கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் போன்றோர் பெரும் மர்மமாகப் பதிலளித்தனர். (இதுபற்றி 'வானவில்' இதழின் முன்னைய இதழ்களில் எழுதப்பட்டுள்ளது)

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிந்து, கூட்டமைப்பினர் ஆதரித்த மைத்திரி வெற்றிபெற்ற பின்னரும் கூட, ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு என்ன என்பது வெளியிடப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், முன்னர் அதுபற்றிக் கூட்டமைப்புத் தலைமையிடம் கேள்வி எழுப்பியவர்களும் அது பற்றி எதுவும் கேட்கவில்லை. அதனால் கூட்டமைப்புத் தலைமைக்கு வந்த துணிச்சலில், அவர்கள் பொதுத் தேர்தலிலும் ஐ.தே.க. தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியையே ஆதரித்தனர். அதற்கு வெகுமதியாக எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் இப்பொழுது வெளியிலிருந்து 'அரசாங்கத்துக்கு வழங்கி வரும் ஆதரவை வாபஸ் வாங்குவோம்' என

செல்வம் அடைக்கலநாதன் எச்சரிப்பதைப் பார்த்தால், அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே ஏதோ உடன்பாடு இருக்கிறது என்பது தெளிவாகின்றது. எனவே அந்த உடன்பாடு என்ன என்பதை தமிழ் பொதுமக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்துவது தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும், அரசாங்கத்தினதும் தட்டிக்கழிக்க முடியாத கடமையாகும்.

அடுத்த விடயம், எதிர்க்கட்சி அந்தஸ்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை வெளியிலிருந்து ஆதரிக்கிறோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறுவதாகும். ஏனெனில், அந்த இரண்டு பாத்திரத்தையும் ஒரே நேரத்தில் வகிப்பதற்கான உரிமை இலங்கையினதோ அல்லது உலகினது எந்தவொரு ஜனநாயகத்திலுமோ இல்லை. அப்படிச் செய்தால் அது பெரும் மோசடியாகும்.

உண்மையில் அரசியல் ரீதியாகவோ அல்லது எண்ணிக்கை ரீதியாகவோ இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியாக இருக்கும் உரிமை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை. அரசியல் ரீதியாக எதிர்க்கட்சியாக இருப்பதற்கு அருகதை இல்லாததிற்குக் காரணம், இன்றைய கூட்டமைப்பு உட்பட முன்னைய எல்லாத் தமிழ் தலைமைகளும் காலாதிகாலமாக ஐ.தே.க. சகாக்களாகவே இலங்கை அரசியல் வரலாற்றில் செயல்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, இன்றைய ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவிக்கு கொண்டு வருவதில் பங்கு வகித்தவர்கள் என்ற முறையிலும் தார்மீகரீதியில் அந்த உரிமை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை.

அதேநேரத்தில், எண்ணிக்கை ரீதியாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்கட்சியாக இருப்பதற்குத் தகுதியில்லை. ஏனெனில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தொகையை விட, ஒன்றிணைந்த எதிரணயிடம் (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம்) கூடுதலான உறுப்பினர்கள் உள்ளனர்.

அவர்கள்தான் மைத்திரி – ரணில் அரசின் மக்கள் - விரோத, தேச – விரோத நடவடிக்கைகளை எதிர்த்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புகிறார்கள். அவர்கள்தான், மக்கள் விரோத வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிந்த நிதியமைச்சர் ரவி கருணநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இந்த நிலைமையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தான்தான் எதிர்க்கட்சி என்ற பித்தலாட்டத்தை விடுத்து, தார்மீகரீதியாக முன்வந்து எதிர்க்கட்சி அந்தஸ்தைத் துறந்து அதை உண்மையாக அதற்கு உரியவர்களிடம் கையளிக்க வேண்டும். அல்லது உண்மையான எதிர்க்கட்சியாகச் செயல்படுகின்ற பொது எதிரணியினரடன் இணைந்து, அரசின் மக்கள் விரோத, தேச விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட வேண்டும்.

இதுவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செல்லக்கூடிய நேர்மையான பாதையாகும். ஆனால் வரலாறு முழுவதும் மோசடி அரசியலையே செய்து பழகிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நேர் வழியில் சிந்திப்பார்களா, செல்வார்களா என்பது கேள்விக்குறிதான்.

**- பாமரன்**

# பக்திப் பாடகர் பித்துக்குளி முருகதாஸ் மறைவு!

தமிழகத்தின் பிரபல பக்திப் பாடகரான பித்துக்குளி முருகதாஸ் தமது 95ஆவது வயதில் காலமானார். இவரது இயற்பெயர் பாலசுப்பிரமணியன். இவர் தனது சொந்த முயற்சியால் 1000இற்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களை தாமே இயற்றி, இசை அமைத்துப் பாடி வந்தார். இவர் பாடிய 'அலைபாயுதே கண்ணா…' என்ற பாடல் மிகப் பிரபரமானது. இவரது 'கணீர்' என்ற வெண்கலக் குரலைக் கேட்க பல்லாயிரக்கணக்கில் ரசிகர்கள் கூடுவதுண்டு. இந்தியாவில் மட்டுமின்றி, பல உலக நாடுகளிலும் இவர் கச்சேரிகளைச் செய்துள்ளார். 1938இல் சுதந்திரப் போராட்டத்தில் இவர் ஈடுபட்டபோது பொலிசாரின் தாக்குதல் காரணமாக இடது கண் பார்வை பறிபோனது. அதன் காரணமாக அவர் எப்போதும் கறுப்புக் கண்ணாடியுடனேயே காட்சி தருவார். அவரது மறைவு பல்லாயிரக்கணக்கான அவரது ரசிகர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

# போர்க்குற்றங்களை 83லிருந்து விசாரிக்கவும்: டக்ளஸ் தேவானந்தா

போர்க்குற்ற விசாரணைகள், 1983ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் வேண்டும். அது சர்வதேச விசாரணையா? உள்ளக விசாரணையா? கலப்பு நீதிமன்ற விசாரணையா? என்பது தொடர்பில் தேவையற்ற விவாதங்களையும் கால இழுத்தடிப்புக்களையும் நாம் விரும்பவில்லை. இந்த விசாரணைப் பொறிமுறையானது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கின்ற விதமாகவும் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வக் கட்சிகளின் கூட்டத்துக்கு அமைவாக ஈ.பி.டி.பி. கட்சி சார்பில் முன்வைக்கப்படுள்ள பரிந்துரைகளில் அவர் தெரிவித்துள்ளதாவது, விசாரணைகள் உண்மைகளைக் கண்டறிவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி மற்றும் பரிகாரங்கள் கிடைப்பதற்கு ஏதுவாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, விசாரணைகள் 1983ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இதில் அரசியல் பழிவாங்கல்களுக்கு இடமளிக்கக்கூடாது. போரை நடத்தியவர்கள், வரவேற்றவர்கள், அறைகூவல் விடுத்து மக்களை அழிவுகள் நோக்கி தூண்டிவிட்டவர்கள், இளைஞர் மற்றும் யுவதிகளை போருக்கு ஆட்சேர்ப்புச் செய்தவர்கள் இதன்போது சட்டத்தின் முன்னிறுத்தப்பட வேண்டும். ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணிகள் ஆராயப்பட்டு, பரிகாரத்துக்கான வழிமுறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக எமது பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு இந்த விசாரணைகள் வழியேற்படுத்துவதாக அமைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

பார்வைகள்:
## லக்டார் பிரகிமி
**(Lakhdar Brahimi)**
**சிரியாவுக்கான முன்னாள் ஐ.நா. சிறப்புத் தூதுவர்**

# சிரிய மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்!

முன்னாள் அல்ஜீரிய வெளிநாட்டமைச்சரான LAKHDAR BRAHIMI ஐ.நாவினதும், அரபு லீக்கினதும் (Arab League) சிரியாவுக்கான முன்னாள் சிறப்புத் தூதுவராவார். அண்மையில் அவர் சீனா சென்றிருந்தபோது, சிரிய நிலவரங்கள் குறித்து சீனாவின் 'பீஜிங் றிவியு' (Beijing Review) வார சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியின் முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீஜிங் றிவியு:** தாங்கள் ஐ.நாவினதும், அரபு லீக்கினதும் சிரியாவுக்கான சிறப்புத் தூதுவர் என்ற வகையில், சிரியாவின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், உங்கள் சொந்த நாடான அல்ஜீரியாவின் விடயங்களிலும் உங்கள் அனுபவங்கள் என்ன?

**பதில்:** சிரியாவைப் பொறுத்தவரையில் அது பெரும்பாலும் எனது வாழ்க்கையில் மகிழ்ச்சியற்ற ஒரு காலமாகும். ஏனெனில் சிரியாவின் அழிவை நீங்களே பார்க்கிறீர்கள். ஆனால் உங்களால் உதவ முடியவில்லை. நீங்கள் உதவக்கூடியவராக இருந்தாலும் உதவ முடியாது. என்னாலும் உதவ முடியவில்லை. நான் பதவி துறந்தபோது சிரிய மக்களிடம் மன்னிப்புக் கோரினேன். எனவே அது மிகவும் மகிழ்ச்சியற்ற ஒரு அனுபவமாகும்.

**பீ.றி:** ஆரம்பத்திலிருந்து முடிவுவரை இந்த நெருக்கடி தொடர்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** அது மிகவும் குழப்பகரமானது. இந்தப் பிரச்சினை எப்படி ஆரம்பமானது, எப்படி வளர்ச்சி அடைந்தது, எப்படி அவர்கள் அதை நிறுத்துவார்கள் என்பதை நாம் பூரணமாக விளங்கிக் கொண்டோம் என நான் சொல்லமாட்டேன். சிரியா ஒரு உயர்ந்த நாகரிகமுள்ள நாடு. ஆனால் மக்கள் ஒருவரை ஒருவர் கொல்லத் தொடங்கிய பொழுது நீங்கள் அதை எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள். கம்போடியர்கள் மிகவும் சாந்தமானவர்கள். ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். சிரியாவைப் பொறுத்தவரை, இந்தக் கொடூரத்தினதும், அழிவினதும் எல்லைகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே எனது அபிப்பிராயம். ஆனால் அது நடந்துள்ளது. நான் நினைக்கிறேன், சிரிய மக்களின் விடயத்தில் நாம் தோல்வி கண்டுள்ளோம் என, ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கி – மூன் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கருதுவது தன்னையோ என்னையோ மட்டுமின்றி, சர்வதேச சமூகத்தையே அவ்வாறு கருதுகிறார். சிரியாவின் அயலவர்கள், வல்லரசுகள் என்பன சிரிய மக்களுக்கு உதவவில்லை. அந்த நாட்டில் எரியிற நெருப்பை அணைக்க தண்ணீரை ஊற்றுவதற்குப் பதிலாக பலர் எண்ணெயை ஊற்றியிருக்கின்றனர். இது பயங்கரமான உண்மை. தற்போது வியன்னாவில் (Vienna) நடைபெறும் கூட்டங்களில் வாக்குறுதிகள் வழங்கப்படுவதைக் காண்கின்றோம். இது தீர்வுக்கான சரியான வழியில் வளர்ச்சி அடையும் என நம்புவோம். இந்தக் கட்டத்தில் அதை நாம் நிச்சயப்படுத்த முடியாவிட்டாலும், அது நடக்கும் என நம்புவோம்.

**பீ.றி:** போரிடும் ஒவ்வொரு தரப்பினதும் நோக்கங்கள் என்ன?

**பதில்:** பெரும்பாலான சிரியர்கள் ஒரு மாற்றம் வர வேண்டும் என விரும்பகின்றனர் என நான் நினைக்கின்றேன். அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் 40 வருடங்களாக ஆளப்பட்டு வருகின்றனர். எனவே அவர்கள் மாற்றத்தை விரும்பகின்றனர். அத்துடன் அங்கே ஏராளமான நீதியற்ற நடைமுறைகளும், ஊழல்களும் நிலவுகின்றன. உண்மையில் அங்கு சட்டத்தின் ஆட்சி இல்லை. எனவே மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். ஆனால் துரதிஸ்டவசமாக அரசாங்கம் இந்த நீதியான அபிலாசைகளைப் புரிந்து கொள்ளவோ, அதற்குச் சாதகமாகச் செயல்படவோ இல்லை. அவர்கள் ஆரம்பத்திலிருந்தே பலாத்காரத்தைப் பிரயோகித்ததுடன், எல்லா இடங்களிலுமிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் வருகின்றன எனவும் எமக்குக் கூறப்பட்டது. மக்களின் அபிலாசை பூர்த்தியாக்கப்படாதவரை, மாற்றம் வேண்டும் என்ற மக்களின் நிலைப்பாட்டில் மாற்றம் வராது.

**பீ.றி:** ஒருவரோடு ஒருவர் இணக்கப்பாடடைந்து, இறுதியாக சமாதானத்தையும் அமைதியையும் அடைவதற்கான ஏதாவது வழிவகை இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்களா?

**பதில்:** இது நடக்கும். அது முன்பு இருந்தது, மீண்டும் உருவாகும்.

**பீ.றி:** சிரிய நெருக்கடியில் சீனா வகிக்கும் பங்கு குறித்த உங்கள் கருத்து என்ன?

**பதில்:** சீனா ஒரு கட்சிக்கு சார்பானதோ அல்லது ஒருவருக்கு எதிராக மற்றவரை ஆதரிக்கின்றது என்றோ, இனங்காணப்படவில்லை. சீனா சிரியாவினதும், இந்தப் பிராந்தியத்தினதும் மக்களின் நண்பன். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஐ.நா. பாதுகாப்புச்சபையின் உறுப்பு நாடு என்ற வகையில், சீனா இந்தப் பிரச்சினையில் மேலும் கூடுதலான ஈடுபாடு காட்டுவதுடன், வியன்னாவில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்தைகளில் பங்குபற்றும் ஒரு நாடு என்ற வகையில், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பக்கச்சார்பற்ற முறையில் மேலும் தீவிரமாகப் பங்காற்றும் என நம்புகிறேன். உங்களால் அது முடியும். நீங்கள் அதைக் கட்டாயம் செய்ய வேண்டும். நிரந்தர உறுப்பு நாடு என்ற வகையில், சீனாவுக்கு தன்னுடைய நாட்டில் மட்டுமின்றி, எல்லா இடங்களிலும் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், உலக சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது.

**பீ.றி:** சீனா எவ்வாறு உதவ முடியும்?

**பதில்:** சிரியர்களுடன் பேச வேண்டும், சிரியாவின் அயலவர்களுடன் பேச வேண்டும், அமெரிக்கர்கள், ரஸ்யர்கள் மற்றும் ஈரானியர்களுடனும் பேச வேண்டும். யுத்தத்துக்காக அல்ல, சமாதானத்தின் அவசியத்தை உணர்கின்ற ஒவ்வொருவருடனும் பேச வேண்டும். சீனா சமாதானத்துக்கு ஆதரவாக சற்று உரத்துப் பேச வேண்டும் என நான் நினைக்கிறேன்.

**பீ.றி:** ஐரோப்பாவின் அகதிகள் நெருக்கடியைப் பொறுத்தவரையில், அதன் அடிப்படையான பிரச்சினைகள், அந்த நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முன் நிபந்தனைகள் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** இந்தக் கோடை காலத்தின் போது அகதிகள் ஐரோப்பாவுக்கு வரத் தொடங்கிய பின்னர் மட்டும் அவர்கள் அப்பிரச்சினை குறித்துப் பேசுவது சற்று நியாயமற்ற விடயமாகும். லெபனானின் மொத்த சனத்தொகை 4 மில்லியன் (40 இலட்சம்). அங்கு, லெபனானில் 2 மில்லியன் அகதிகள் இருக்கின்றனர். எவருமே அதைப்பற்றிப் பேசுவதில்லை. ஜோர்டானின் சனத்தொகை 6 மில்லியன். துருக்கியின் சனத்தொகை 18 மில்லியன். ஆனால் அங்கு சிரியாவிலிருந்து வந்த 2 மில்லியன் அகதிகள் இருக்கின்றனர். இதில் ஏற்கெனவே நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. ஐரோப்பியர்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சினை. சில ஐரோப்பியர்கள் நம்பமுடியாத அளவுக்கு தாராளத் தன்மையையும், பொறுப்புணர்வையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றனர். அவர்களது பெருந்தன்மையை நாம் மதிக்கிறோம். சிலர் மிகவும் இனவாத அடிப்படையில் பேசுகின்றனர். அது கண்டிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினை கடந்த நான்கு வருடங்களாக நிலவி வருகின்றபோதிலும், இந்தக் கோடைகாலத்தில் மட்டும் அவர்கள் இதைப் பேசத் தொடங்கியிருப்பதையிட்டு நான் கவலைப்படுகிறேன்.

*

# முதுமையில் ஏற்படும் நோய்களும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளும்

பிரதிபலனை எதிர்பார்க்காமல் ஓய்வின்றி உழைக்கும் இதயத்தைப் பாதுகாப்பது நமது தலையாய கடமை. அதற்கு சில வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

காலமுறைப்படி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். உயர் ரத்த அழுத்தத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோய் பல தொல்லைகளின் நண்பன். இந்நோயைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வது அவசியம்.

உணவிலும் கவனம் தேவை. அரிசி, சர்க்கரை, கிழங்கு மற்றும் கொழுப்பு அதிகம் உள்ள பண்டங்களை நாடாதீர்கள். தினமும் கீரை, கோதுமை, கேழ்வரகு, கம்பு, தினை, கொள்ளு, முட்டையின் வெள்ளைக் கரு, மீன், ஓட்ஸ், சோயா, காளான் மற்றும் பழ வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பாதாம் பருப்பு, வால்நட், அத்திப்பழம் போன்றவை இதயத்தை வலுவடையச் செய்யும். தினசரி செய்யும் உடற்பயிற்சி மிகமிக அவசியம். மது, புகைப் பிடித்தல் அறவே தவிர்க்க வேண்டும். சிறிது உப்பைக் குறைத்துச் சாப்பிடுங்கள்.

தியானம், பிராணாயாமம் போன்றவை மனதுக்கு மட்டுமல்லாமல், உடல்நலத்திற்கும் நல்லது.

### தொற்றுநோய்கள் வராமல் தடுக்க

ஒருவர் இருமும்போது நோய்க் கிருமிகள் அவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது. ஆகையால் முதியவர்கள், கூட்டம், நெரிசல் அதிகமுள்ள இடங்களைத் தவிர்ப்பது நல்லது.

முடிந்தளவிற்கு பனி மற்றும் மழைக்காலங்களில் வெந்நீரை அருந்த வேண்டும். வெளியே உண்ணுவதை முடிந்தளவிற்குத் தவிர்க்க வேண்டும்.

உடலில் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்க நெல்லிக்காய், ஆரஞ்சு, எலுமிச்சை, பாதாம் கொட்டை போன்ற உணவு வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

முடிந்தளவிற்கு தண்ணீர் அதிகம் அருந்தி அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும்.

தொற்று நோய்கள் வராமல் இருக்க தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

### சிறுநீரக நோய்கள் தவிர்க்க

நமது உடலைச் 'சுத்தமாக' வைத்திருக்கும் சிறு நீரகத்தை 'பத்திரமாக' வைத்திருப்பது நமது கடமை அல்லவா? அதற்கு இதோ சில எளிய வழிமுறைகள்.

நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு தக்க சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவரின் ஆலோசனையின்றி வலி நிவாரணி மாத்திரைகளை தொடர்ந்து உண்ணுதல் கூடாது.

தண்ணீர் அதிகம் அருந்த வேண்டும். முதியவர்கள் ஒரு நாளைக்கு 2 – 3 லிட்டர் நீர் அருந்த வேண்டும்.



நமது உணவில் சராசரியாக 10 முதல் 15 கிராம் உப்பைச் சேர்த்துக் கொள்கிறோம். உலக சுகாதார நிறுவனம் உப்பின் அளவு ஒரு நாளைக்கு 5 கிராம் போதுமென்று அறிவித்துள்ளது. நம் உணவில் பாதிக்கு மேல் உப்பின் அளவைக் குறைத்தாலே சிறுநீரகம் பல ஆண்டுகள் பழுதின்றி உழைக்கும். உப்பு அதிகம் உள்ள உணவுப் பொருட்களைத் தவிர்க்கலாம். உதாரணம்: ஊறுகாய், அப்பளம், வடகம், உப்பு அதிகம் உள்ள பிஸ்கட், வெண்ணெய், சீஸ், இறைச்சி, சிப்ஸ், பாப்கார்ன்.

சிறுநீர்த் தாரையில் அடைப்பு போன்ற தொல்லைகள் ஏதுமிருப்பின் (உதாரணம்: சிறுநீரகம் மற்றும் சிறுநீர் தாரையில் இருக்கும் கட்டிகள், கற்கள், ப்ராஸ்டேட் சுரப்பியின் வீக்கம்) அவை நாளடைவில் சிறுநீரகத்தைச் செயலிழக்கச் செய்யும். காலந்தாழ்த்தாமல் சிறு நீரக அறுவைச் சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெற வேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை முழு உடற்பரிசோதனை செய்யும்போது சிறு நீரகம் சார்ந்த பரிசோதனைகளை (இரத்தத்தில் யூரியா, க்ரியாடினின், சிறுநீரில் புரதம்) அவசியம் செய்து கொள்ள வேண்டும்.

**அவசர சிகிச்சை எப்போது?**

கீழ்கண்ட தொல்லைகள் ஏற்பட்டால் காலம் தாழ்த்தாது உடனே மருத்துவரின் உதவியை நாடவும்.

நெஞ்சில் பரவலான வலி – மாரடைப்பு.

திடீரென மூச்சு விடுவதில் சிரமம் - மாரடைப்பு, இதயம் இழத்தல்.

நெஞ்சில் சளி, அலர்ஜி, திடீரென்று மனக்குழப்பம், தொற்றுநோய் பாதிப்பு, பக்கவாதம், எலும்பு முறிவு, சிறுநீர் அடைப்பு.

திடீரென்று அதிகப்படியாக வேர்த்துக் கொட்டுதல், குறைந்த ரத்த அழுத்தம், குறைந்த சர்க்கரை அளவு, அதிகப்படியான வாந்திபேதி, வயிற்றில் ஏற்பட்ட தொற்றுநோய், திடீரென்று வாய் குளறுதல், நடப்பதில் சிரமம், ரத்த வாந்தி.

மயக்கம், தலைச்சுற்றல், உயர் ரத்த அழுத்தம், கழுத்து எலும்பு தேய்வு, மூளையில் கட்டி, திடீரென்று தோலில் ஏற்படும் சிவப்பு, அலர்ஜி.

**அடையாள அட்டை**

முதியவர்கள் வெளியே செல்லும்போது தங்களின் அடையாள அட்டையை அவசியம் தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும். அடையாள அட்டையில் பெயர், முகவரி, தொலைபேசி எண், புகைப்படம், பிறந்த தேதி, இரத்த குரூப், நோய்களின் விபரம், சாப்பிடும் மாத்திரைகளின் விபரம், குடும்ப டாக்டரின் பெயர், தொலைபேசி எண், முகவரி, அவசர அழைப்புக்கு அழைக்க வேண்டிய நபரின் பெயர், தொலைபேசி எண் போன்றவை இடம்பெற்றிருக்க வேண்டும்.

மேற்கூறிய வழிமுறைகளைக் கையாண்டால் முதுமை என்பது ஒரு சுமையாக இருக்காது.

**- பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன் (முதியோர் நல மருத்துவர்)**

நன்றி: மங்கையர் மலர்

# பெரியவர்களும் சிறியவர்களும்

கடந்த 100 வருடங்களில் வரலாறு காணாத அளவு மழை வெள்ளத்தில் தமிழகம் சிக்கித் தவிக்கிறது.

இருந்தும் மாநில — மத்திய அரசுகள் மந்த கதியிலேயே வெள்ள நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அரசுகளின் செயற்பாட்டை விட மனித நேய அமைப்புகளும், சில தனிநபர்களும் அதிக அளவில் மக்களுக்கு உதவி வருகின்றனர். தமிழகத்தில் கோடீஸ்வரர்களான பல முதலாளிகள், சினிமா கலைஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் இருந்த போதும், அவர்களை விட ஏழைகளே ஏழைகளுக்கு உதவுவதில் முன்னணியில் நிற்கின்றனர். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

மதுரை ராஜாஜி அரசுப் பொது மருத்துவமனையின் பிரேத பிரிசோதனைக்கூடத்தில் கடந்த 33 வருடங்களாகப் பணிபுரியும் யு.விஜயன் என்பவர், தனது 26 வயது மகள் மூன்றாண்டுகளாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து மீண்டு வந்ததிற்கு நன்றி செலுத்தும் வகையில் தமிழக முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதிக்கு 20,000 ரூபாயை வழங்கியுள்ளார்.

அதேபோல, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யுவைச் சேர்ந்த ஒரு ஓய்வுபெற்ற தொழிலாளி, தனது ஓய்வூதியப் பணத்தில் 5,000 ரூபாவை கட்சியின் வெள்ள நிவாரண நிதிக்கு மனமுவந்து வழங்கியுள்ளார்.

இவர்களின் ஆதர்சமான முன்னுதாரணத்தைப் பார்க்கும் போது, எமது நாட்டில் 30 வருடமாக கொடூரப் போர் நடந்த காலத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற தமிழ் தலைவர்கள், தமது நிதியிலிருந்து குறைந்த பட்சம் ஒரு பாடசலைப் பிள்ளைக்கு ஒரு பென்சிலையோ, வெண்கட்டியையோ கூட வழங்கவில்லை என்ற விடயம்தான் நினைவுக்கு வருகிறது. *

முன்பக்கத்தொடர்ச்சி...

ஏற்ப, ஜே.ஆர். கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பால், கடந்த 37 வருடங்களாக நமதுநாடு எத்தகைய வினையைச் சந்தித்தது என்பதை இங்கு விபரிக்கத் தேவையில்லை. இத்தகைய ஒரு சூழலில் ஐ.தே.கவின் சிரேஸ்ட தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல, டொனமூர் அரசியல் அமைப்பைப் பற்றிப் பேசுவது, அவரது காலனித்துவ விசுவாச மனோநிலையையும், வரலாற்றை பின்னோக்கி இழுக்க எடுக்கும் முயற்சியையும்தான் எடுத்துக் காட்டுகிறது.

இது ஒருபுறமிருக்க, அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமது அரசாங்கம் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாட்டுக்கு புதிய அரசியல் அமைப்பு ஒன்றை அறிமுகம் செய்ய இருப்பதாகவும், அதில் மூன்று முக்கிய விடயங்கள் இடம்பெறும் என்று கூறினார். அவர் கூறிய மூன்று விடயங்கள்: நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது, தேர்தல் முறைமையில் சீர்திருத்தம், அதிகாரப் பகிர்வு என்பனவாகும்.

ரணில் என்ன விடயங்களை மனதில் வைத்துக் கொண்டு இந்த மூன்று விடயங்களுக்காகவும் அவதிப்படுகிறார் என்பது எமக்குப் புரியும் என்றாலும், பொதுவாகப் பார்க்கையில் இந்த மூன்று விடயங்களும் நாட்டுக்கு மிக அவசியமானவை என்பதில் எவருக்கும் கருத்து முரண்பாடு இருக்க முடியாது.

முதல் இரண்டு விடயங்களைப் பொறுத்தவரையிலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்காரரான மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்து, அதிகாரத்தை முற்றுமுழுதாகத் தனது கையில் எடுப்பதும், ஐ.தே.க. தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிபெறக்கூடிய வகையில் தேர்தல் முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதும், ரணிலின் திட்டம் என்பது வெள்ளிடைமலை.

ஆனால், மூன்றாவது விடயமான

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக ரணில் என்ன நோக்கத்தைக் கொண்டிருக்கிறார் என்பதுதான் கேள்விக்குறியான விடயம்.

ஏனெனில், இலங்கையில் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பங்கிட்டளிக்கும் முதலாவது ஒப்பந்தம் 1957இல் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவுக்கும், தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட, “பண்டா — செல்வா ஒப்பந்தம்” ஆகும். ஆனால் அதை நடைமுறைப்படுத்த விடாமல் கிழித்தெறிய வைத்த பெருமை ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவையே சாரும்.

அடுத்த முயற்சி, 1987இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் அன்று ஜனாதிபதியாக இருந்த அரசியல் குள்ள நரியான ஜே.ஆர். நிர்ப்பந்தம் காரணமாகக் கையெழுத்திட்டாலும், மனதார அவர் அந்த ஒப்பந்தத்தை விரும்பவில்லை. தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து, அந்த ஒன்றிணைந்த மாகாணத்துக்கு ஓரளவு அதிகாரத்தை வழங்கிய அந்த ஒப்பந்தத்தை ஜே.ஆருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஆர்.பிரேமதாசவின் ஐ.தே.க. அரசாங்கம் ஒருதலைப்பட்சமாகச் செயலிழக்க வைத்தது.

அதன்பின்னர், சந்திரிக குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், அவர் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் 2000ஆம் ஆண்டில் தீர்வுத் திட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைத்தது. அந்தத் தீர்வுத் திட்டம் இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையை மாற்றி, இலங்கையை பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற, ஓரளவு சுயாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வை முன்வைத்தது. அதில் இரண்டு முக்கியமான விடயங்கள் உள்ளடங்கி இருந்தன. ஒன்று, பிராந்திய சபையின் அங்கீகாரம் இன்றி, அச்சபையை மத்திய அரசாங்கம் கலைக்க முடியாது. இரண்டாவது, இன்று மலையகத் தமிழ் மக்களுக்கு சாதாரண சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பிரஜாவுரிமையை அந்தத் திட்டம் மாற்ற முடியாதவாறு அரசியல் அமைப்பு ரீதியாக உத்தரவாதம் செய்தது. சிறுபான்மை தேசிய இனங்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு ஏற்பாடுகளும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை.

இதுவரை இலங்கையில் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டங்களிலேயே மிகவும் சிறப்பான இந்தத் திட்டத்தை வழமைபோல ஐ.தே.க. நிறைவேற்ற விடாமல் முறியடித்தது. ஐ.தே.க. தலைவர் ரணில் முன்னிலையிலேயே நாடாளுமன்றத்திற்குள் வைத்து ஐ.தே.க. உறுப்பினர்கள் அதைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஐ.தே.க. மட்டுமின்றி, இன்றைய அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்த ஜே.வி.பி., தமிழ் தேசியக் கூட்டமைப்பு (அன்று அது தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் இருந்தது), இன்றைய அரசாங்கத்தில் பங்காளியாக இருக்கும் ஜாதிக ஹெல உறுமய என்பனவும் எதிர்த்து முறியடித்தன.

அந்தத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் தாம் ஏன் எதிர்த்தோம் என்பதற்கு பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கமளித்த ரணில் விக்கிரமசிங்க, “அந்தத் திட்டம் தமிழர்களுக்கு அதிக உரிமைகளை வழங்கியதே காரணம்” எனக் கூறினார். இந்தச் சூழ்நிலையில், அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக காலத்துக்குக் காலம் முன்வைத்த சகல தீர்வுத் திட்டங்களையும் எதிர்த்து முறியடித்த ஐ.தே.கவின் இன்றைய வாரிசுகளான ரணில் விக்கிரமசிங்கவும், அவரது சகாக்களும், புதிய அரசியல் அமைப்பில் எவ்வாறான அதிகாரப் பகிர்வை முன்வைக்கப் போகிறார்கள்?

அதுவும், கடந்த பொதுத் தேர்தலின்போதுகூட, தான் ஒருபோதும் சமஸ்டி வகையிலான தீர்வுக்கு இணங்கப் போவதில்லை என ரணில் கூறியிருக்கிறார்.

அதுமாத்திரமின்றி, அவரது சகாவான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் இராணுவ வைபவம் ஒன்றில் பேசுகையில், இலங்கைக்கு ஒற்றையாட்சி முறையே சிறப்பானது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அதேநேரத்தில், இன்றைய அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதிலும், மேற்கத்தைய சக்திகளின் ஆதரவை அதற்குப் பெற்றுக் கொடுப்பதிலும் பின்னணியில் இருந்து முக்கிய பங்கினை வகித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்க, அதிகாரப் பகிர்வு சம்பந்தமான தனது முன்னைய நிலைப்பாட்டில் இன்னமும் உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது. அண்மையில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தாம் தலைவியாக இருக்கும் ‘தேசிய ஐக்கியம் மற்றும் மீள் இயக்கத்துக்கான காரியாலயம்’ நடாத்திய ஒரு கருத்துக் கணிப்பில், சிங்கள மக்களில் 68 சத வீதமானோர் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக இருப்தாகக் கூறியிருக்கிறார். இது ஒரு நல்ல சாதகமான விடயம்.

எனவே, அவர் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும்போது, தனது அரசாங்கத்தால் 2000ஆம் ஆண்டில் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை அதில் உள்ளடக்கி, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இன்றைய அரசை வலியுறுத்த வேண்டும். இன்றைய சூழலில் அவர் ஒருவரால் மட்டுமே இந்தப் பணியை நிறைவேற்ற முடியும். செய்வாரா சந்திரிக? *

**“உழைக்கும் வர்க்கம் தங்களுக்கிடையிலான முரண்பாட்டை பூனை தன் குட்டியைக் கவ்வுவது போலவும், எதிரியுடனான முரண்பாட்டை புலி தன் இரையைக் கவ்வுவது போலவும் கையாள வேண்டும்”**

**–மாஓ**

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் நஸ்டஈடு வழங்க வேண்டும்!

**நா**ட்டில் பரவலாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக, விவசாயிகளின் உற்பத்தி முயற்சிகள் பெரும் பாதிப்பை அடைந்துள்ளன. குறிப்பாக 30 வருடகால யுத்தத்தின் பின்னர், கடந்த ஆறேழு வருடங்களாக பெரும் சிரமங்களுக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த வட பகுதி விவசாயிகள் பலத்த இழப்பை எதிர்நோக்கி நிற்கின்றனர்.

குறிப்பாக, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெல் செய்கையில் ஈடுபட்டு வரும் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் விவசாயிகள், பெரும் மழை காரணமாக வயல்கள் நீரில் மூழ்கி பயிர்கள் அழிந்த நிலையில், செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். நெல் செய்கை மட்டுமின்றி, இந்த மாவட்டங்களில் உப உணவுச் செய்கை, வாழைச் செய்கை என்பனவற்றில் ஈடுபட்டிருந்தவர்களும் பெரும் இழப்பை அடைந்துள்ளனர்.

உதாரணமாக, வெள்ளம் அழிவை ஏற்படுத்துவதற்கு முன்னர் ஒரு கிலோ பச்சை மிளகாய் 100 ரூபாய் வரையில் விற்றுவந்த நிலையில், தற்போது 1000 ரூபாவுக்கு மேல் விற்கிறது என்றால், வெள்ள அழிவின் கடுமையை ஒருவர் புரிந்து கொள்ள முடியும்.


முன்னைய காலங்களைப் போல மனித உழைப்பை மட்டும் மூலதனமாகப் போட்டு செய்வதல்ல இன்றைய விவசாயம். வயலை உழுவதற்கு, விதை நெல்லைப் பெறுவதற்கு, விதைப்பதற்கு, களையைக் கட்டுப்படுத்துவதற்கு, உரமிடுவதற்கு, அறுவடை செய்வதற்கு, நெல்லைப் பிரித்தெடுப்பதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, சந்தைப்படுத்துவதற்கு என, ஒரு ஏக்கரில் நெல் செய்கை பண்ணுவதானால், பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் பணம் வேண்டும்.

இந்தப் பணத்தைப் பெறுவதற்கு விவசாயிகள் நாயாய் அலைந்தால்தான் முடியும். ஏனெனில் அன்றாடம் காய்ச்சிகளான அவர்களில் யாரும் கையில் பணத்தைச் சேமிப்பாக வைத்திருப்பதில்லை. சிலர் மனைவி பிள்ளைகளின் நகைகளை அடகு வைப்பர். அதுவும் இல்லாதவர்கள் காணிகளை அறாவட்டிக்கு ஈடு வைத்துப் பணம் பெறுவர். இன்னும் சிலர் அரச – தனியார் வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் போதிய பிணை உறுதியுடன் வட்டிக்குப் பணம் பெறுவர். எனவே எல்லோருமே யாருக்காவது கடனாளிகளான நிலையிலேயே விவசாயத்தில் இறங்குவது வழமை.

இந்த நிலைமையில், தற்போதைய அடைமழை ஏற்படுத்தியுள்ள அழிவு காரணமாக, அந்த விவசாயிகள் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர். அவர்களது இந்த அவலநிலை குறித்து, அவர்களது பாராளுமன்ற உறுப்பினர்களோ, ஏனைய அரசியல்வாதிகளோ, அரச அதிகாரிகளோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

போதாததிற்கு 'பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது போல' அரசு கொண்டு வந்த மக்கள் விரோத பட்ஜெட்டுக்கு எல்லோரும் கைதூக்கி ஆதரவு தெரிவித்துவிட்டு நிற்கின்றனர்.

## வன்னியிலிருந்து




'அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்' என்ற நிலையில்தான் பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் நிலை இருக்கின்றது. எனவே தமது பிரச்சினைகளுக்காக விவசாயிகள்தான் தாமாக முன்வந்து குரல் கொடுக்க வேண்டும். அவர்கள் அதைத் தனித்து நின்று செய்ய முடியாது. முதலில் ஒரு மாவட்டத்திலாவது, அவர்கள் ஒரு சங்கமாக இணைந்து நின்று தமது பிரச்சினைகளுக்காக அமைப்பு ரீதியாகக் குரல் கொடுக்க வேண்டும்.

முன்னைய காலங்களில், வன்னிப் பிரதேசத்தில் விவசாயிகளுக்கு என்று பலமான விவசாயிகள் அமைப்பு இருந்தது. அந்த விவசாயிகள் சங்கங்கள் அன்று தொடர்ச்சியாகப் போராடிப் பெற்ற சில உரிமைகள்தான் இன்று விவசாயிகள் அனுபவிப்பவையாகும். ஆனால், கொடிய யுத்தம் வந்து விவசாயத்தை நாசம் செய்ததின் காரணமாக, விவசாயிகள் மட்டுமின்றி, விவசாய சங்கங்களும் கூடக் காணாமல் போயின. ஆனால், இன்று விவசாயம் மீண்டும் ஆரம்பமாகியுள்ள நிலையில், மற்றைய தொழில்துறைகளில் உள்ளதைப் போல, விவசாயிகளுக்கும் அவர்களது உரிமைகளுக்காகப் போராட விவசாயிகள் சங்கத்தின் தேவை மீண்டும் எழுந்துள்ளது.

தற்போதைய சூழலில் பின்வரும் சில அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்தாவது விவசாயிகள் கூட்டாக இயக்கத்தை ஆரம்பிக்கலாம்.

- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் அரசாங்கம் நிவாரணப் பொருட்கள் வழங்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், அவர்கள் உற்பத்திக்காக செலவிட்ட தொகையை ஈடுகட்டும் வகையில் அரசாங்கம் போதிய நஸ்டஈடு வழங்க வேண்டும்.
- வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களை ரத்துச்செய்ய வேண்டும்.
- அடுத்த காலபோக செய்கைக்கு இலவச விதை நெல்லும், வட்டி இல்லாக் கடனும், மானிய விலையில் பசளை, கிருமிநாசினி என்பனவும் வழங்க வேண்டும்.

குறைந்தபட்சம் இந்த அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்தாவது, மீண்டும் விவசாயிகள் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக இருக்கின்றது.

**-தியாகு**